MELUR MUNICIPALITY

Minutes of the Council Meeting held on 27.08.2018 (Ordinary)

<table>
<tr><th>Resolution No.</th><th>Serial Number and subject in the Agenda</th><th>Decision of the Council</th></tr>
<tr><td>324</td><td>

**பொருள் எண்.1**

அலுவலகப் பயன்பாட்டிற்காக கீழ்க்கண்ட விபரப்படி சொத்துவரி, காலியிடவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம் ஆகியவை பிரிண்ட் எடுத்ததை 30 புத்தகங்களாக A3 பேப்பரில் பைண்டிங் செய்வதற்கு விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<table>
<tr><td>விபரம்</td><td>JP புக் பைண்டிங் & பிரிண்டிங் ஒர்க்ஸ் ரூ.</td><td>ஜெயம் ஜெராக்ஸ் & ஜாப் டைப்பிங் ரூ.</td></tr>
<tr><td>சொத்துவரி , காலியிடவரி ,தொழில்வரி, குடிநீர் கட்டணம் நடப்பு மற்றும் நிலுவை பதிவேடுகள் 30 புத்தகங்கள் பைண்டிங் செய்ய ஆகும் செலவு</td><td>3000</td><td>3500</td></tr>
</table>

அலுவலகக்குறிப்பு

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் JP புக் பைண்டிங் & பிரிண்டிங் ஒர்க்ஸ் – ன் குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>325</td><td>

**பொருள் எண்.2**

மேலூர் நகராட்சிக்கு எல்லைக்குள் உள்ள அனைத்து சொத்துவரி விதிப்புகளும் சீராய்வு செய்வது தொடர்பாக நகராட்சி நிர்வாக ஆணையரகம் வெளியிட்டுள்ள அரசாணைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்

1. அரசாணை எண்.73 நாள்.19.07.2018
2. அரசாணை எண்.76 நாள்.26.07.2018

</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | அலுவலகக்குறிப்பு<br>மன்றம் பதிவு செய்யலாம். | |
| 326 | **பொருள் எண்.3**<br><br>திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ஐ செயல்படுத்த ஏதுவாக நகரில் உருவாகும் திடக்கழிவுகளின் Characterstics analysis செய்வதற்கான கோயம்புத்தூர் Greenlink analytical and Research Laboratory (India) Private Limited நிறுவனத்தை கோரியதில் அந்நிறுவனம் Characteristics study செய்து தனது அறிக்கையினை அளித்துள்ளது. மேற்படி ஆய்விற்கான கட்டணம் தொகை ரூ.16225/– ஐ நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 327 | **பொருள் எண்.4**<br><br>இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் டிப்பர் லாரி எண்.TN59BX1344 வண்டிக்கு தகுதிச்சான்றிதழ் பெறுவதற்கு வண்டியில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்ய வேண்டி உள்ளது. அதற்கான தோராய செலவினம் ரூ.1.50 இலட்சத்திற்கும், அவசர அவசியம் கருதி மேற்படி பழுதுநீக்கப் பணியினை அரசு சார்ந்த உள்ளூர் மேலூர் வேளாண்மை பொறியியல் சேவை கூட்டுறவு மையம் மூலமாக மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 328 | **பொருள் எண்.5**<br><br>இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் டிராக்டர் டிரைலர் எண்.TN59W5185 வண்டிக்கு தகுதிச்சான்றிதழ் பெறுவதற்கு வண்டியில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்ய வேண்டி உள்ளது. அதற்கான தோராய செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கும், அவசர அவசியம் கருதி மேற்படி பழுதுநீக்கப் பணியினை அரசு சார்ந்த உள்ளூர் மேலூர் வேளாண்மை பொறியியல் சேவை கூட்டுறவு மையம் மூலமாக மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது. | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | |
| 329 | **பொருள் எண்.6**<br>இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் டம்பர் பிளேசர் லாரி எண்.TN59AZ3449 வண்டிக்கு தகுதிச்சான்றிதழ் பெறுவதற்கு வண்டியில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்ய வேண்டி உள்ளது. அதற்கான தோராய செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கும், அவசர அவசியம் கருதி மேற்படி பழுதுநீக்கப் பணியினை அரசு சார்ந்த உள்ளூர் மேலூர் வேளாண்மை பொறியியல் சேவை கூட்டுறவு மையம் மூலமாக மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 330 | **பொருள் எண்.7**<br><br>மேலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள சொத்துவரி விதிப்புகளுக்கு சொத்துவரி சீராய்வு 01.04.2018 முதல் அமல்படுத்துவதற்கு தேவையான சொத்துவரி சுய மதிப்பீட்டு படிவம் கீழ்க்கண்ட நிறங்களில் ,<br><br>1. குடியிருப்பு கட்டிடம் – இளம் நீல நிறம்<br>2. வணிகக்கட்டிடம் – இளம் சிவப்பு நிறம்<br>3. தொழிற்சாலை கட்டிடம்– வெள்ளை நிறம்<br><br>ஆகிய நிறங்களில் சுயமதிப்பீட்டு படிவம் அச்சடிப்பதற்கும் மற்றும் சொத்துவரி சீராய்வு திருத்தம் அறிக்கை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும், கேபிள் டி.வி.விளம்பரம், ஆட்டோ விளம்பரம் , பைண்டிங் செலவு மற்றும் அவ்வப்போது அரசால் தெரிவிக்கப்படும் அறிவுரைக்கேற்ப மேற்கொள்ளப்பட வேண்டியவற்றிற்கான உத்தேச செலவினம் ரூ.5,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td>331</td>
<td>

**பொருள் எண்.8**

தூய்மை இந்தியா– தனிநபர் கழிப்பறை அவசியம், திறந்தவெளிக் கழிப்பிட தீமைகள், பிளாஸ்டிக் ஒழிப்பு, திடக்கழிவு மேலாண்மை மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திட கலைநிகழ்ச்சிகள் நகரின் பல்வேறு இடங்களில் நடத்துவதற்கான தோராய செலவினம் ரூ.40,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு<br>
மன்றம் அனுமதிக்கலாம்.<br>
கோப்பு எண்.1895/2018/எச்1

</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>332</td>
<td>

**பொருள் எண்.9**

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.22866/பி3/2018ன் படியான நிர்வாக அனுமதியின்படி கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள ஒப்பந்த.புள்ளி கோருவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<table>
<tr><td>வ.எண்.</td><td>வேலையின் பெயர்</td><td>மதிப்பீடு</td></tr>
<tr><td>1.</td><td>வாரச்சந்தையில் 4LPDதிறன் கொண்ட நுண்ணுயிர் உரக்கிடங்க அமைக்கும்பணி</td><td>ரூ.45.00இலட்சம்</td></tr>
<tr><td>2.</td><td>புதிதாக கட்டப்படவுள்ள நுண்ணுயிர் உரக்கிடங்கைச் சுற்றி சுற்றுச்சுவர் அமைக்கும் பணி</td><td>ரூ.4.00இலட்சம்</td></tr>
<tr><td>3.</td><td>பேட்டரி மற்றும் Operated Vehicle 5 எண்ணம் வாங்குதல்</td><td>ரூ.9.00இலட்சம்</td></tr>
</table>

அலுவலகக்குறிப்பு<br>
அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண்.975/இ1/2018

</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 333 | **பொருள் எண்.10**<br><br>இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் கொசுக்களால் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைக்கும், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் குப்பைகளை மக்கச் செய்வதற்கும் கீழ்க்காணும் மருந்துகள் மற்றும் உபகரணங்கள் வாங்க வேண்டியுள்ளது.<br><br>1. ரெடிமிக்ஸ் மருந்து– 100லி<br>2. EM சொலூசன் –300 லி<br>3.லெமன் கிராஸ் ஆயில்–200லி<br>4 கொசுவலை– 13000எண்ணிக்கை<br><br>இவற்றை வாங்கி வழங்குவதற்கான தோராய செலவினம் ரூ.15.00 இலட்சத்திற்கு அனுமதியும், ஒப்பந்தப்புள்ளி கோரி வாங்கிக் கொள்ளவும், மன்ற அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.<br>அலுவலகக்குறிப்பு<br>பொதுசுகாதார நலன்கருதி மேற்கண்ட உபகரணங்கள் வாங்கிக் கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 334 | **பொருள் எண்.11**<br><br>சென்னை மேலாண்மை இயக்குநர் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் அவர்களின் ந.க.எண்.2923/2016/TNSRLM-ATW நாள்.20.01.2018 ஆணையிட்டதன்படி மேலூர் நகராட்சி எல்கைக்குட்பட்ட 27 வார்டுகளிலும் பணிபுரியும் பெண்களுக்கான இருசக்கர வாகனம் வழங்கும் திட்டம் 2017–18ன் கீழ் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் விளம்பரப்பலகைகள் , நோட்டீஸ்கள், சுவரொட்டிகள் மற்றும் வரன்முறைப்படுத்தப்படாத மனைகளுக்கு மனைவரன்முறைப்படுத்த விளம்பரப்பலகைகள், நோட்டீஸ்கள், சுவரொட்டிகள் மற்றும் முகாம் நடத்திய வகைக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.124/2018/சி1 | அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td>335</td><td>

**பொருள் எண்.12**

இந்நகராட்சிக்குட்பட்ட காந்திஜி பூங்கா ரோடு கடை எண்.24ஐ குத்தகை எடுத்து உரிமம் அனுபவித்து வந்த திரு.எம்.பழனிச்சாமி என்பவர் தனது குடும்ப சூழ்நிலை மற்றும் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் மேற்காணும் கடையை தொடர்ந்து நடத்த இயலாத சூழ்நிலையில் உள்ளதாகவும், மேற்படி கடையினை நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்வதாகவும் விண்ணப்பம் செய்துள்ளார்.

மேற்படி கடையினை இந்நகராட்சியின் வருவாய் உதவியாளர் மூலம் நேரில் சென்று ஆய்வு செய்யப்பட்டு மேற்படி கடைக்கு நடப்பு மாதம் வரை மின்கட்டணம் செலுத்தப்பட்ட ரசீது மற்றும் கடை சாவியும் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சிக்குட்பட்ட காந்திஜி பூங்கா ரோடு கடை எண்.24ஐ நகராட்சி வசம் எடுத்துக்கொண்டு பொது ஏலத்திற்கு கொண்டுவர மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

மேற்படி கடையினை பொதுஏலத்திற்கு கொண்டுவரவும், ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 340/2018/அ2)

</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>336</td><td>

**பொருள் எண்.13**

இந்நகராட்சியில் அவசர அவசியம் கருதி கீழ்க்கண்ட பணிகள் அதில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பீட்டில் நகராட்சி விதிகள் 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<table>
<tr><th>வ. எண்.</th><th>வேலையின் பெயர்</th><th>மதிப்பீடு ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>உரக்கிடங்கில் அமைந்துள்ள கணினி எடை மேடை பழுது நீக்கும் பணி</td><td>2,30,100</td></tr>
<tr><td>2.</td><td>மலம்பட்டி உரக்கிடங்கில் தீப்பிடித்ததை அணைக்க ஜே.சி.பி மற்றும் தண்ணீர் லாரி பயன்படுத்தமைக்கு செலவினம்</td><td>1,71,100</td></tr>
</table>

</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கலாம். | |
| 337 | **பொருள் எண்.14**<br><br>இந்நகராட்சியில் Bio Diversity Management செயல்படுத்த நகர்மன்றத்தலைவர்/ தனிஅலுவலரை தலைவராகக் கொண்டும், வனத்துறை அலுவலரை செயலராக கொண்டும், சமூக ஆர்வலர்கள், மருத்துவர்கள் , வர்த்தகர்கள், மகளிர்குழு உறுப்பினர்கள் ஆகியோர் உள்ளிட்ட ஆறு நபர்களை உறுப்பினர்களாக அதில் ஒரு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த வரும் ஒருவர் மகளிரும் உள்ளிட்ட Bio Diversity Management Committee அமைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 338 | **பொருள் எண்.15**<br><br>இந்நகராட்சியில் நடைபெறும் ஒப்பந்தப்புள்ளிகளை மின்ஒப்பந்தபுள்ளியில் பதிவேற்றம் செய்ய நகராட்சி பொறியாளர் மற்றும் பொதுபணி மேற்பார்வையாளர்களுக்கு E-Token ல் Digital Signature Certificate கட்டணம் ரூ.9600/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 339 | **பொருள் எண்.16**<br><br>தூய்மை இந்தியா திட்ட திடக்கழிவு மேலாண்மை , தனிநபர் கழிப்பறை திறந்தவெளிக் கழிப்பிட தீமைகள், டெங்கு காய்ச்சல், பிளாஸ்டிக் ஒழிப்பு தொடர்பாக பொதுமக்களிடத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு கலை நிகழ்ச்சிகள் நடத்திக் கொடுக்க விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ளன. | அனுமதிக்கப்பட்டது |

| வ. எண். | விபரம் | நிகழ்ச்சி ஒன்றிற்கு |
|---|---|---|
| 1 | D.அறிவழகன்,<br>கரிசல் கலைக்குழு,<br>எருமலைநாய்க்கன்பட்டி. | ரூ.6000 |
| 2 | எஸ்.முருகன்,<br>விடியல் கலைக்குழு,<br>செக்காணுரணி. | ரூ.8000 |
| 3 | D.முருகன்,<br>மலர் கலைக்குழு,<br>12, அம்பேத்கார் காலனி,<br>திருமங்கலம். | ரூ.8500 |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகக்குறிப்பு

குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண்.1ல் காணும் கரிசல் கலைக்குழுவின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

ந.க.எண்.1895/2018/எச்1